உயிரோலம் காதில் கேட்கிறதா
கார்த்திகைப் பூ நெஞ்சில் பூக்கிறதா
திரு வாசல் மண்ணில் இருளானது ஏனோ
தடை யாகும் காலம் தொடராவது ஏனோ
எங்கள் கண்கள் இப்பொ கண்ணீர் கோலம் வீரரே
எங்கள் காலம் இப்பொ மௌனம் தானே வீரரே (2)

உயிர் கொடை அளித்தீரே இறைமனம் அல்லவா
நினைவோடு நீங்கள் தமிழ் பேசும் பூக்கள்
உலகத்தின் சதியில் தமிழ் இனம் அல்லவா
கனவோடு வாழ்ந்தீர் களமாடி நீங்கள்
எங்களின் வாசல்கள் என்றைக்கு விடியுமோ
ஏக்கங்கள் வாழ்கையாய் ஆவது முடியுமோ
தேசப்படத்தை கிறினீர் வாழ்ந்த காலம் நெஞ்சிலே
தோழில் எங்கள் பாரம் சுமந்த மாவீரரே

புலி நடை அழகானீர் புது யுகம் அல்லவா
மொழியாகி நீங்கள் முச்சாகினீர்கள்
விழி அனல் அதிர்ந்தீரே புயல் தடம் அல்லவா
வழிகாட்டும் விழியில் பலமாக நீங்கள்
எங்கள் தீண்டிடும் தீவினை சாகுமோ
ஏன் இந்த சோதனை காலங்கள் மாறுமா
போரில் நீங்கள் ஆடி வென்ற புதுமை என்ன முயரிலே
உங்கள் வீரம் எங்கள் வாழ்வு மாவீரரே